முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மணப்பாறை

தேதி : 17.07.2026

**அ.வ.எண். : 77/2025**

**பி.வா.சா.1 (அருள்மேரி) : <u>சாட்சி ஆஜர். சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. ராயப்பன் பேரில் முகவனூர் தெற்கு கிராமத்தில் எத்தனை சர்வே எண்ணில் நிலம் உள்ளது என்றால் சர்வே எண்.658, சர்வே எண்.459/5 என்ற சர்வே எண்ணில் நிலம் உள்ளது. அதற்குமேல் உள்ள நிலம் எனக்கு தெரியாது. எனது நிருபண வாக்குமூலத்தில் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் யாருடைய இறப்பு சான்றிதழ்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சாட்சி ஆவணங்களை பார்த்துவிட்டு ராயப்பன் வாரிசு சான்று, மைக்கேல் இறப்பு சான்று மற்றும் வாரிசு சான்று தாக்கல் செய்துள்ளேன்.

2. ராயப்பன் தான செட்டில்மென்ட் ரத்து பத்திரத்தை வருவாய்துறையினரிடம் கொடுத்து மேற்படி சொத்து சம்மந்தமாக பெயர் நீக்கம் செய்ய மனு கொடுத்துள்ளாரா என்றால் தெரியும். 1968 ல் மனு கொடுத்து UDR ல் பதிந்துள்ளார். நான் சவரியாயி பெயரில் உள்ள சொத்தை பெயர் நீக்கம்செய்வதற்கு வருவாய் அதிகாரிகளான மாவட்ட ஆட்சியர், வட்டாட்சியரிடம் மனு கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். எந்த தேதியில் மனு கொடுத்தேன் என்றால் 2013 ல் மனு கொடுத்தேன். மனுவை வருவாய் அதிகாரிகள் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் ரசீது கொடுத்தார்காள என்றால் கொடுத்தார்கள். முதல் வழக்கு நடக்கும்போது நான் வழக்கறிஞரிடம் கொடுத்தேன்.

3. நான் கொடுத்த மனுவில் வருவாய் அதிகாரிகள் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்றால் வட்டாட்சியர் அலுவலகத்தில் விசாரணை செய்து இந்த இடம் பிரச்சனையாக உள்ளது. பட்டா மாறுதல் செய்ய இயலாது என கூறிவிட்டார்கள். நான் மேற்படி மனுவில் நடவடிக்கை இல்லை என்பதை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் தாக்கல் செய்யவில்லை. வாதி தாக்கல் செய்துள்ளார். இறந்துபோன செபஸ்தியான்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

யாருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் செபஸ்தியான் அவரது சகோதரர் ரபேல் க்கு எதிராகவும், மைக்கேல் வாரிசுகளான சபரிமுத்து, ரத்தினம், ஜோசப், அருள்மேரி ஆகியோர்களுக்கு எதிராக அந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

4. அந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதாக சொன்னார்கள். மேற்படி வழக்கின் வழக்கு கோப்பு பி.வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டது. மேற்படி வழக்கில் எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். வழக்கு தள்ளுபடிஆகிவிட்டது. செபஸ்தியான் மீதும் வாதி லூர்துமேரி மீதும் நான் எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு என்வசம் உரிமை மூல ஆவணம் இல்லை என்றால் எனது மூதாதயாரான எனது ஐயாவிற்கும், எனது அப்பாவிற்கும் பாகபிரிவினையில் பிரிந்து எனது அப்பாவிற்க பிறகு எனது சகோதரர்கள், நான் அனுபவித்துவருகிறேன்.

5. ராயப்பன் இறந்தபிறகு அவருடைய சொத்திற்கு அவரது வாரிசு அனைவருக்கும் சொத்தில் பங்கு உள்ளது என்றால் அவருடைய வாரிசுகளுக்கு அவர் உயிருடன் இருக்கும்போதே பங்கு பிரித்துக்கொடுத்துவிட்டார். ராயப்பன் இறந்தபிறகு அவரது வாரிசுகளான அமிர்தம்மாள், செபஸ்தியான், ரபேல், மைக்கேல் ஆகிய நான்கு பேருக்கும் பாகம் உள்ளது. நான் மட்டும் உரிமை கோர முடியாது என்றால் அமிர்தம்மாள், செபஸ்தியான், ரபேல், ஆகிய மூவரும் சொத்திற்கும் எங்களுக்கும் சம்மந்தம் இல்லை என மைக்கேல் என்பவருக்கு பதிவு செய்யப்படாத விடுதலை ஆவணம் எழுதிகொடுத்துவிட்டார்கள்.

6. பி.வா.சா.ஆ.6 பாக விடுதலை ஆவணம் பதிவு செய்யப்படாத ஆவணம் என்பதால் ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 658/2A3 நிலத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வாதிக்குதான் 1968 க்கு பிறகு பூர்வீகமாக எனது ஐயாவிற்கு கிடைக்கப்பெற்று எனது தகப்பனாருக்கு

கிடைக்கபெற்று நாங்கள் அனுபவித்துவருகிறோம். 1968ம் ஆண்டு எனது ஐயா ராயப்பன் அனுபவித்தார் என்பதற்கு அவர் பெயரில் ஆவணம் உள்ளதா என்றால் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். நிலவரி ரசீது ராயப்பன் 1968ல் செலுத்தினாரா என்றால் எனக்கு தெரியாது. எனது தகப்பனார் பெயரில் ரசீது செலுத்தியது தெரியும்.

7. எனது தகப்பனார் மைக்கேல் எந்த தேதியில் ரசீது செலுத்தினார் என்றால் நான் முதல் வழக்கில் கொடுத்தேன். தாவா சொத்தின் நான்கெல்லை தெரியுமா என்றால் மேற்கு–ரோடு, கிழக்கு–செபஸ்தியான் நிலம், வடக்கு–தோமாஸ் நிலம், தெற்கு–வெள்ளையம்மாள் நிலம் மற்றும் சபரியார் வீடு உள்ளது. நான் சொன்ன நான்குமாலுக்கு ஆவணம் உள்ளதா என்றால் பி.வா.சா.ஆ.2 மற்றும் பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் உள்ளது. தாவா சொத்திற்கும் எனக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை. தாவா செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படவேண்டும் என்றால் சரியல்ல. உண்மைகளை மறைத்து பொய்யாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இத்துடன் வாதி தரப்பு குறுக்கு விசாரணை முடிவடைகிறது.

மறு விசாரணை இல்லை.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.**

**(ஒப்பம்/–திரு. V. ஜெயமுருகன்)**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**மணப்பாறை**